No. of Printed Pages : 7

June 2015

**5011**

+2

பதிவு எண் | | | | | | |

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

1. தமிழை உள்நாட்டு மொழிகளோடு ஒப்பவைத்து வகைப்படுத்துதல் ஆகாது என்று பரிதிமாற்கலைஞர் கூறுவது ஏன்?

2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை?

3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?

4. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

5. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க உரைப்பன யாவை?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

6. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை?

7. நீதிநூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை?

9. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

10. ஆ தெய்வத் தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் மிகாது விடை தருக. 1x6=6

11. தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

IV. பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 2x10=20

13. 'சட்டை' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'வேலி' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மண்' அல்லது 'கிழிசல்' என்னும் சிறுகதையில் நும்மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

நீவிர் விரும்பிய ஓர் சுற்றுலாவுக்குச் செல்ல முடியாது தடையேற்பட்டு அதனால் வருத்தம் எய்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்து இருபக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

அல்லது

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம் கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!

கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறம் என்னும் தமிழ்நாடு வாழ்க!

- நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன. 3x2=6

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக.

16. Look before you leap.

17. Prevention is better than cure.

18. Many thanks for your kind message of greetings.

19 Time and tide wait for none.

20. Knowledge is power.

21. Give me the mangoes which you have bought.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் **பத்து** வரிகளில் எழுதுக. 1x4=4

(அ) 'முயற்சி திருவினை ஆக்கும்'

(ஆ) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

(இ) தன்கையே தனக்குதவி.

அல்லது

'காடு' அல்லது 'குயில்' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x2=10

VI மற்றும் VII இல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தினுக்கு மட்டும்** ஏற்ற விடையை எழுதுக.

சுவை என்னும் தமிழ்ச் சொல்லும், ரசம் என்னும் வடசொல்லும் ஒரே பொருள் உடையன. நாவினால் நுகரப்படும் சுவை ஆறு வகைப்படும் என்பர். செவியால் நுகரப்படுவன குண, அலங்காரங்களாகிய சொற்சுவைகளும், ஒன்பது வகையான பொருட்சுவைகளும் ஆம். நாவால் சுவைத்து உண்டவை அப்பொழுதே அற்றுவிடும். செவியால் சுவைத்து உண்டவை உள்ளத்தே எப்பொழுதும் நிலைபெற்று இன்பம் பயக்கும்.

இனிப் பொருட் சுவை ஒன்பதாவன: நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை என்பன. இச்சுவையுணர்வுகள் மேற்குறித்த செவி வாயிலாக அன்றிக் கண் வாயிலாகவும் நிகழாநிற்கும்.

மேற்குறித்த ஒன்பது சுவையுள் சமனிலையாவது சாந்தம். அது உலகியலின் நீங்கினார் பெற்றியாகலின் ஏனைய எட்டுமே காப்பியங்களிற் பயின்று வருவனவாகும்.

**வினாக்கள் :**

16. சுவையைக் குறிக்கும் வடமொழிச் சொல் யாது?

17. நாவால் உணரப்படும் சுவைகள் எத்தனை வகைப்படும்?

18. செவியால் உணரப்படும் சுவைகள் யாவை?

19. எச்சுவை நிலைத்த இன்பம் பயக்கும்?

20. சமனிலை என்பதன் பொருள் யாது?

[ திருப்புக

21. காப்பியங்களில் பயின்றுவராத சுவை எது?

22. பொருட்சுவைகள் எவையெவை?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. 10x1=10

23. இடதுபக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று.

(வாக்கியப் பிழையைத் திருத்தி எழுதுக)

24. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. அம்மாசிச் சோறு ஆசைப்பட்டா கெடைக்காது

(தொடரில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)

26. மேனேஜர் அலுவலரிடம் ஃபைலைக் கொண்டு வருமாறு கூறினார்.

(அலுவலகக் கலைச் சொற்களைத் தமிழாக்கம் செய்க)

27. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.

(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லெழுத்துகளை நீக்கி எழுதுக)

28. சுவறில் இருந்து பள்ளி கீழே விழுந்தது.

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

29. பசுமாடு கன்றைப் போட்டது.

(மரபு வழுக்களை நீக்கி எழுதுக)

30. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.

(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக)

31. காண் - கான் அல்லது வால் - வாள் பொருள் வேறுபாட்டை உணர்ந்து தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

32. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது என்று என் தந்தை சொன்னார்

(பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டெழுதுக)

-oOo-